**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தீண்டாமை ஒழிப்பு - ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் நல்லிணக்க குழு அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை

அரசு ஆணை (நிலை) எண். 117
நாள் 29. 09. 1998

படிக்க

ஆணை

மக்கள் சாதி சமய வேறுபாடுகளால் ஒருவருக்கொருவர் முரண்பட்டு பொது அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுவடுவதைத் தவிர்க்கவும், எங்காகிலும் அதைக் குலைவு ஏற்பட்ட தருணத்து உடனே மக்களை அமைதிப்படுத்தி அப்பகுதியில் அமைதியை உருவாக்கவும், தடுப்பு நடவடிக்கையை எடுக்கவும் பொதுமக்களின் நல்லெண்ணங்களைப் பெற்றுள்ள சான்றாளர்ளையும், நாடளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் நிர்வாக பொறுப்பிலுள்ள மக்கள் தலைவர்களையும் உள்ளடக்கிய நலலெண்ணக் குழுக்கள் ஒவ்வொரு வட்ட அளவிலும் அமைக்கப்படும் என்றும் 31.8.97 அன்று மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார்.

2. அவ்வறிக்கையில் செயலாக்கும் வண்ணம் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு வருவாய் வட்டத்திலும் கீழ்வரும் அமைப்பொழுக்கைக் கொண்ட ' நல்லிணக்கக் குழு ' அமைக்கப்பட அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | கோட்டாட்சித் தலைவர் | அமைப்பாளர் |
| 2 | மக்களைவை உறுப்பினர் | உறுப்பினர் |
| 3 | சட்டப்பேரவை உறுப்பினர் | உறுப்பினர் |
| 4 | ஊராட்சி ஒன்றியத் தலைவர் | உறுப்பினர் |
| 5 | நகராட்சித் தலைவர் | உறுப்பினர் |
| 6 | ஆதிதிராவிட/பழங்குடியின சான்றாளர் ஒருவர் | உறுப்பினர் |
| 7 | ஆதிதிராவிடரல்லா சான்றாளர் ஒருவர் | உறுப்பினர் |

3. ஒவ்வொரு மாவட்டத்திலும் வருவாய் வட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்கக் குழு பற்றிய அறிவிக்கையை அரசிதழில் வெளியிட அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. இரத்தினசாமி,
அரசு செயலாளர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து கோட்டாட்சித் தலைவர்கள்
அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள்
காவல்துறை தலைவர், சென்னை-2
காவலதுறை துணைத் தலைவர்
(குடியியல் உரிமைகள் பாதுகாப்பு) சென்னை-30
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை-9
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
பொது (சட்டம் மற்றும ஒழுங்கு) துறை, சென்னை-9
உள்துறை , சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு) துறை, சென்னை-9
ஆணையர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9
இயக்குநர், அரசு எழுதுபொருள் அசசுத்துறை, சென்னை-2
பணிமேலாளர், அரசு எழுதுபொருள் அசசுத்துறை, சென்னை-2
செயலர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்